[1973 ஏப்ரல் 5

Kannagi Temple

* 630 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the (1) Kerala Government and (2) Travancore Devaswom Board have sent any report to the State Government about the Kannagi Temple in Kerala State; and

(b) if so. the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (1) கண்ணகிக் கோவிலை இவ்வரசின் பாதுகாப்பிற்காக ஒப்படைக்கக் கோரி 1971-ம் ஆண்டிலேயே கேரள அரசுக்கு எழுதப்பட்டது. இக் கோரிக்கை தனது அரசின் பரிசிலனையில் இருப்பதாகக் கேரள அரசு தெரிவித்துள்ளது.

(2) திருவிதாங்கூர் அறநிலைய வாரியத்திற்கு இவ்வரசு கடிதம் எதுவும் எழுதவில்லை.

(இ) கேரள அடசிடமிருந்து இப்பொருள்பற்றி மற்றபடி தகவல் எதுவும் கிடைக்கப்பெறவில்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, 1971-ம் ஆண்டு கேரள அரசுக்கு அதைப்பற்றி எழுதியும் இதுவரையில் பதில் வரவில்லை என்றால் அதற்கான காரணம் என்ன? மீண்டும் நமது அரசு அதை நினைவுபடுத்தியிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கேரள அரசு அங்கே இருக்கிற தொல்பொருள் ஆராய்ச்சித் துறையைக் கலந்தாலோசித்து முடிவு அறிவிப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். பதில் கடிதம் எதிர்பார்க்கப்படுகிறது.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவரவர்களே, இந்த கேரள மாநிலத்தில் இருக்கிற கண்ணகி கோயிலை முதலில் ஆராய்ந்து கண்டறிந்தவர் யார் ? அவருக்கு ஏதாவது பரிசு அளித்துச் சிறப்பு செய்ய நமது அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தஞ்சை கரந்தை புலவர் கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர் ஒருவர் கண்டறிந்து கூறியிருக்கிறார். அந்த கோயிலைப்பற்றிய முழு விபரமும் கேரள அரசிடமிருந்து கிடைத்தபிறகுதான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கமுடியும்.

1973 ஏப்ரல் 5]

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, கேரள அரசு அந்தக் கோயிலை நம்மிடம் கொடுக்கவேண்டாமென்று கேரளத்திலுள்ள லோக்கல் பத்திரிகைகளில் செய்தி வந்திருப்பதாக நான் அறிகிறேன். அது நம்முடைய அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அங்கே இருக்கிற தேவஸ்வம்போர்டு அதிகாரிகள் அவர்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும் அந்தக் கோயிலைத் தமிழ் நாட்டு அரசிடம் ஒப்படைக்க வேண்டாமென்றும் கேரள அரசைக் கேட்டிருப்பதாக பத்திரிகைகளில் செய்திகள் வந்திருக்கின்றன. ஆனால் நமக்கு அதிகாரப்பூர்வமான பதில் எதுவும் வரவில்லை. தமிழக எல்லையிலிருந்து அந்தக் கோயில் ஒரு மைல் தொலைவில் இருக்கிறது. அங்கே அந்த இடத்திற்கு வேங்கைக்கானல் என்றும் மங்களதேவிக் கோட்டம் என்றும் பெயர் வழங்கப்படுகிறது. அது ஒரு பாழடைந்த மண்டபம். 400 சதுர அடி பரப்பளவுடையது. 50 அடி நீளம், 8 அடி அகலம், 10 அடி உயரம் கொண்டதாக அந்த மண்டபம் இருக்கிறது. இவைகளைக் கொண்டுதான் அந்தப் பேராசிரியர் தன்னுடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறார். அதை அடிப்படையாகக்கொண்டு கேரள அரசை அந்தக் கோயிலை ஒப்படைக்க வேண்டுமென்று நமது அரசு கேட்டது. அவர்கள் ஆராய்ந்து அறிந்த பிறகு பதில் அனுப்புவதாகத் தெரிவித்தார்கள். முழு விவரமும் இன்னும் வரவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அங்கே இருக்கிற தேவஸ்வம் போர்டு இது கண்ணகி கோயில் அல்ல ; பகவதி அம்மன் கோயில் என்று அறிவித்திருப்பதாக மலையாளப் பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. அதுபற்றிய திட்டவட்டமான முடிவுகள் நமக்கு வந்திருக்கின்றனவா ? கல்வெட்டுகளோ வேறு ஏதாவது சான்றுகளோ இருக்கின்றனவா என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கேரள அரசிடம் இருந்து முழு விவர அறிக்கை வந்த பிறகுதான் அதுபற்றி ஆராயப்படும். கண்ணகி கோயில்கூட காலப் போக்கில் பகவதி கோயில் என்று மாறியிருக்கிறது என்று வல்லுநர்கள் தெரிவிக்கிறார்கள். எதுவும் முழு விபரமும் தெரிந்த பின்னால் முடிவு செய்யப்படும்.

திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை: தலைவரவர்களே, கண்ணகிக் கோயிலைப்பற்றிக் கூறும்போது அமைச்சரவர்கள் அது தமிழ்நாட்டு எல்லையிலிருந்து ஒரு மைல் தொலைவில் இருக்கிறது என்று சொன்னார்கள். கேரள எல்லையிலிருந்து சுமார் 25 மைல் தொலைவிலுள்ள பல லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பத்மனாபபுரம் கொட்டாரத்தை நாம் பிரிந்துவந்தபோது கேரள அரசுக்கு விட்டுக்கொடுத்தோம். அதைப்போலவே இப்போது ஒரு மைல் தொலைவிலுள்ள கண்ணகி கோயிலை நமக்கு விட்டுக்கொடுக்க வேண்டுமென்று நமது அரசு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பத்மனாபபுரம் அரண்மனையை ஒப்படைத்தது, கேரளமும் தமிழ்நாடும் பிரியும் போது ஏற்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில். மொழிவழி மாநிலமாகப் பிரியும்போது இப்படிப்பட்ட ஒரு உடன்பாடு ஏற்பட்டிருந்தால் நாம் அதைக் கேட்கலாம்; அவர்களும் ஒப்புக் கொள்வார்கள். அப்போது இதுபற்றிய தகவல் நமக்குத் தெரியவில்லை. இப்போதுதான் நமக்கு அது தெரிய வந்திருப்பதால் கேரள அரசைக் கேட்டிருக்கிறோம். அவர்களின் பதிலை எதிர் பார்க்கிறோம். பதில் வந்த பிறகு இந்தப் பிரச்சினை குறித்து எப்படி அணுகமுடியுமோ அப்படி அணுகலாம்.

Assistance to Bharatiya Vidya Bhavan

* 631 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Tamil Nadu Government have given any financial assistance to the Bharatiya Vidya Bhavan in Madras; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) ஆம். பம்பாயிலுள்ள பாரதீய வித்யாபவனம் சென்னையில் அதன் ஒரு கிளையை நிறுவ மைலாப்பூரில் உள்ள ஒரு கட்டடத்தை விலைக்கு வாங்க வசதி செய்யும் பொருட்டு 1963-ல் ரூ. 25,000 மொத்த மானியமாக இம்மாநில அரசால் வழங்கப்பட்டது.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்: தலைவரவர்களே, அதன் பணிகள் யாவை என்பதை அறிய விரும்புகிறேன்.